## தமிழ்நாட்டில் 'திராவிட மாடல்' ஆட்சியில்

# மருத்துவத் துறைப் பணியிடங்கள் - விருதுகள் - கட்டமைப்பு வளர்ச்சி!

## சட்டப்பேரவையில் – எதிர்க்கட்சித் தலைவருக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு :**

**மருத்துவத்துறைப் பணியிடங்கள், விருதுகள், கட்டமைப்பு வளர்ச்சி குறித்து விரிவாகப் பதிலளித்தார்.**

சட்டப்பேரவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது மருத்துவர், செவிலியர் காலிப்பணியிடம் தொடர்பான கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதில் வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஊடகத்தை அதிகம் பார்ப்பதில்லை என்பதை அவரது பேச்சு வெளிப்படுத்தியுள்ளது. மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்தது என்பது உண்மை, அது எதனால் என்பது அவருக்கும் தெரியும். இது தொடர்பாக நிலுவையில் இருந்த 30க்கும் மேற்பட்ட வழக்குகள் தீர்வு காணப்பட்டு, ஒரு வாரத்திற்கு முன்பு 1021 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கு காலிப்பணியிடங்கள் இருந்ததோ 20 மாவட்டங்களில் காலிப்பணியிடங்கள் அதிகமாக இருந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்த 1021 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக கடந்த 8 ஆண்டுகளாக உதகையில் 57 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்தன, தற்போது 55 மருத்துவர்கள் பணியில் இணைந்துள்ளனர். மேலும், 1251 மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளது. அதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் ஊடகங்களில் வந்துள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 864 செவிலியர் பணியிடங்கள் காலியாக இருந்தது, நேற்றைக்கு முன்தினம் MRB கோவிட் காலத்தில் பணியாற்றிய செவிலியர்கள் 977 பேருக்கு பணியாணைகள் நேற்றைக்கு முன்தினம் தரப்பட்டது. செவிலியர் காலிப்பணியிடங்கள் 100% நிரப்பப்பட்டு, Arising Vacancies ம் நிரப்பப்பட்டுள்ளது. இந்த செய்தியும் அனைத்து ஊடகங்களிலும் வந்துள்ளது. மருந்தாளுநர் பணியிடங்கள் 986, சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் 1066, கிராம சுகாதார செவிலியர்கள் 2250 ஆகிய MRB தேர்வுகள் முடிக்கப்பட்டுள்ளது, இதுதொடர்பாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்குகள் 15 நாட்களில் முடிவுக்கு வரும். ஆனால் மருத்துவத் துறையில் காலிப்பணியிடங்கள் அதிகமாக இருப்பது போன்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது உண்மை இல்லை.

**தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது**

2012 ஆம் ஆண்டு முதல், தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS - National Quality Assurance Standards Certificate) ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவ கட்டமைப்புகள் மற்றும் மருத்துவ சேவைகளின் செயல்பாடுகளை பொறுத்து, இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது 2012 முதல் 2024 வரை 12 ஆண்டுகளில் 614 விருதுகள் தமிழ்நாட்டிற்குகிடைத்துள்ளது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 07.05.2021க்கு பிறகு 545 விருதுகள் கிடைத்துள்ளது. எதிர்கட்சி தலைவர் 4 ஆண்டு காலம் முதலமைச்சராக பொறுப்பு வகித்த காலம், அதற்கு முன்னாள் 6 ஆண்டுகாலம் ஆட்சி காலத்தில் வெறும் 69 விருதுகள் மட்டுமே தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது.

**மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ்**

மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LaQshya - Labour Room Quality Improvement Initiative) என்ற விருது 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால்



வழங்கப்பட்டு வருகிறது. 7 ஆண்டுகளாக வழங்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை 84 ஆகும். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டரை ஆண்டுகளில் 55 விருதுகள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முன்பு நடைபெற்ற ஆட்சி காலத்தில் 29 விருதுகள் மட்டுமே கிடைத்துள்ளது.

**மருத்துவ கட்டிடங்கள் பற்றிய விவரம்**

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள மருத்துவ கட்டிடங்களின் விவரங்களை தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். இதனை எதிர்கட்சித் தலைவர் அவர்களே அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களோடு ஒப்பிட்டு பார்த்துக்கொள்ளட்டும்.

**புதிய ஆரம்ப சுகாதார நிலையம் – புதிய மருத்துவக் கல்லூரி :**

எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி செய்த 4 ஆண்டு கால ஆட்சியில் கொண்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியலை உங்களிடம் சமர்ப்பிக்க சொல்லுங்கள். 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. 8713 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இதில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் 4 ஆண்டு கால ஆட்சியில் கொண்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் பட்டியல்களை தெரிவிக்கச் சொல்லுங்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆண்டு ஒன்றிய அரசிடம் கேட்டு 25 ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கொண்டு வந்துள்ளார்.

2011 பிப்ரவரியில் கலைஞர் அவர்கள் தான் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும் என்று கொண்டு வந்து செயல்படுத்தப்பட்டது தான், எதிர்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிடும் 11 புதிய மருத்துவ கல்லூரிகள் திட்டம். இந்த 11 மருத்துவக் கல்லூரிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு தான் ரூ.400 கோடி செலவில் மருத்துவமனை கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 இடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது நாகப்பட்டினம் மற்றும் உதகமண்டலம் ஆகிய 2 இடங்களில் மருத்துவமனை கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**மினி கிளினிக்**

மினி கிளினிக் என்பது ஓராண்டு காலத்திற்கான திட்டம் ஆகும். இது தேசிய சுகாதார குழுமம் (NHM ) ஆல் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதில் ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே இருந்தார், செவிலியர்கள் இதில் இல்லை. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் வந்தவுடன் இது நிறுத்தப்பட்டது. மேலும் இந்த மினி கிளினிக் நிறைய இடங்களில் சுடுகாடு இடங்கள், கழிவறை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டது. இது அந்த ஓராண்டு காலத்துடன் நிறுத்தப்பட்டது. இதன் பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மொகாலா கிளினிக்கைப் பார்த்து தமிழ்நாட்டில் அதுபோன்ற மருத்துவமனைகள் வரவேண்டும் என்று முடிவு செய்து, 708 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் அமைக்கத் தொடங்கி 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவத் துறை குறித்து விரிவான பதில் அளித்தார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுக்கு

# பெருமை தேடித் தந்த நீதிபதி ஸ்ரீபதிக்கு வாழ்த்துகள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, பிப்.16-

"முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசுக்குப் பெருமை தேடித் தந்த நீதிபதி ஸ்ரீபதிக்கு வாழ்த்துகள்" என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மனிதனின் அடிப்படைத் தேவைகள்கூட இல்லாத எவ்வித வசதிகளும் இல்லாத மலைவாழ் கிராமமான திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த 23 வயதே நிரம்பிய பழங்குடியினத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி அவர்கள், உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றதற்கு முதற்கண் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவரது வெற்றி "சமூக நீதிக் காவலர்"களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அடிச்சுவட்டில், 'எல்லோருக்கும் எல்லாமும்' எனும் அடிப்படையைக் கொண்டு "திராவிட மாடல்" ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட 'தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை' என்ற அரசாணையின் வழியே உரிமையில் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளது சமூகநீதிக்கு, திராவிட மாடல் ஆட்சிக்கும் கிடைத்த மற்றுமொரு மகுடமாகும்.

இத்தருணத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, நூறாண்டு காலமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் பட்டியலின வகுப்பைச் சேர்ந்த எவரும் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்ததில்லை. இதை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், பல உயர் சாதியினரின் எதிர்ப்புக்கு இடையே பட்டியலினத்தைச் சேர்ந்த வரதராஜன் அவர்களை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமித்து வெற்றி கண்டார். தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் சென்னை உயர் நீதிமன்றத்தில் முதன் முதலாக பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவர் நீதிபதியாக பரிந்துரைக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு நடைபெற்றது. பின்னாளில், அதே வரதராஜன் அவர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றார்.



ஐம்பதாண்டுகளுக்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிகழ்த்திய வரலாற்று நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில், உரிமையியல் நீதிபதி தேர்வில் பழங்குடியினத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். இந்நிகழ்வின் மூலம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அடியொற்றி ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருப்பதன் மூலம் "திராவிட மாடல்" அரசுக்கு பெருமை தேடி தந்த திருமதி ஸ்ரீபதி அவர்களுக்கு வழக்கறிஞர் என்ற முறையில் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே உச்சநீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய வரதராஜன் அவர்கள் போன்று தாங்களும் உச்சநீதிமன்ற நீதிபதியாக வாழ்த்துகிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# தூத்துக்குடியில் இன்று பொதுக் கூட்டம்! பொன். முத்துராமலிங்கம் சிறப்புரை!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வேண்டுகோள்!

தூத்துக்குடி, பிப். 16-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், இன்று (பிப்ரவரி 16ல்) தூத்துக்குடி என். பெரியசாமி கிரிக்கெட் மைதானத்தில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில் மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன். முத்துராமலிங்கம் பங்கேற்கிறார் என மாவட்டச் செயலாளர்கள் திருமதி. பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரவிருக்கும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு





தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து, தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும், திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில் கழக பொதுக் கூட்டங்கள், முன்னணியினர் பங்கேற்கும் பரப்புரை நாடாளுமன்ற தொகுதி வாரியாக நடத்திட கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

கழகத் தலைவரின் அறிவுரைக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் இன்று (16.02.2024 -வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் அளவில் தூத்துக்குடி மீளவிட்டான் சாலையில் உள்ள என். பெரியசாமி கிரிக்கெட் மைதானத்தில் பிரம்மாண்ட பரப்புரை பொதுக் கூட்டம் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தில் தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பொன். முத்து ராமலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க கழகத் தலைவர் அவர்களின் குரலாக நடைபெறும் இந்த பரப்புரைக் கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல் வீரர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

---

## நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும்

# கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

நாமக்கல், பிப்.16-

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் தளபதியார் அரங்கில் மாவட்ட அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

அப்போது அவர் பேசும் போது, வரும் மார்ச் 1 அன்று நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும். நாடாளுமன்ற தேர்தலையொட்டி கடந்த 10 ஆண்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகள், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்த அ.தி.மு.க.வின் துரோகங்கள் ஆகியவற்றை கழக நிர்வாகிகள்மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்,

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் ஜி.தங்கவேல், கே.செல்வராசு கு.பழனிவேல், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ. இளங்கோவன், நகர கழக செயலாளர்கள் டி.கார்த்திகேயன், அ.குமார், டி.விஜய கண்ணன், எஸ்.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் மு.திருமலை, ஆர். கருணாநிதி, எம்.ரமேஷ்பாபு, பி.முருகன், எம்.ராமலிங்கம், பி.முருகவேல், எஸ்.ராமமூர்த்தி, எஸ்.பி. கார்த்திராஜ், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே.மயில்சாமி, எம்.சாந்தி, பொருளாளர் எம்.ராஜாராம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.வெங்கடாசலம், ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.ரவி ச்சந்திரன், திருநாவுக்கரசு (எ) எஸ். ஆர். பழனியப்பன், பி.பி.சாமிநாதன், ஆர்.வேலுமணி, எம்.இந்திராணி மயில்சாமிமற்றும் மாவட்ட சார்பு அணி தலைவர்கள், அமைப்பாளர்கள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக்குழு துணை தலைவர் பி.ராஜவேலு, நகர் மன்ற தலைவர்கள் திருச்செங்கோடு நளினி சுரேஷ்பாபு, பள்ளிபாளையம் எம்.செல்வராஜ், துணை தலைவர்கள் குமாரபாளையம் வெங்கடேசன், பள்ளிபாளையம் பி.பாலமுருகன், பேரூராட்சி தலைவர்கள் பரமத்தி மணி, பாண்டமங்கலம் எஸ்.சோமசேகர், படவீடு பேரூராட்சி துணை தலைவர் எஸ்.பிருந்தாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் திராவிட இயக்கத்தின் நான்காவது அத்தியாயம், முன்னேற்றக் கழகத்தின் மூன்றாம் பாகம் "இனமும், இயக்கமும், காலமும், கலைஞரும்" தந்த அருட்கொடை, தமிழ்கூறும் நல்லுலகின் தன்னிகரில்லா, ஒப்பாருமிக்காருமில்லா ஒருபெரும் கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக மார்ச் 1 அன்று அகிலம் வியக்கும் திராவிட மாடல் ஆட்சியின் பொன்னாளாக, நன்னாளாக கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, கழக அரசின் மகத்தான சாதனைகளை எடுத்துக் கூறி, ஏழை, எளியோர், மாற்றுத்திறனாளிகள், மாணவ மாணவியர் என அனைத்து தரப்பினருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் வெகு சிறப்பாக கொண்டாடுவது,

சேலத்தில் 21.01.2024 அன்று நடைபெற்ற இளைஞர் 2வது மாநில மாநாட்டை இந்திய துணைக் கண்டமே வியக்கும் வகையில் நடத்திக் காட்டிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து சொல்வது,

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலையொட்டி கடந்த 10 ஆண்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகள், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்த அ.தி.மு.க.வின் துரோகங்கள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பரப்புரைக் கூட்டம் இன்று (16.02.2024-வெள்ளிக்கிழமை) நாமக்கல் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு, பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு நாமக்கல், பூங்கா சாலையிலும், ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு ஈரோட்டிலும் நடைபெற வுள்ளது. நாமக்கல்லில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், ஈரோட்டில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர். இப்பரப்புரைக் கூட்டத்தில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இந்திய திருநாட்டின் ஒப்பற்ற ஆளுமை நிறைந்த மாநிலமும் கலைஞர் ஆட்சியின் வழித்தடத்தில் மேலும் வழிவூட்டும் வகையில், நடைபெறும் நமது திராவிட மாடல் அரசிற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் தொழில் வளம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்த உள்நாட்டு முதலீடுகள் மட்டும் போதாது என பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் செயல்படும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்து கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## தமிழ்நாட்டில்

# 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

சென்னை,பிப்.16-

தமிழ்நாட்டில் 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழக அரசு நிர்வாக காரணங்களுக்காக அவ்வப்போது துறை வாரியாக அதிரடி மாற்றங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அரசுத்துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான். அந்த வகையில், தமிழ்நாடு முழுவதும் 6 மாவட்ட ஆட்சியர் உள்பட 14 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், தற்போது 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், 'மாநில மனித உரிமைகள் ஆணைய செயலாளராக ஏ. சுகந்தி ஐ.ஏ.எஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் உள்துறை இணைச் செயலாளராக எஸ்.பி. அம்ரித் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், வணிக வரித்துறை இணை ஆணையராக (நிர்வாகம்) பி. ரத்தின சாமி ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று இணை மேலாண் இயக்குநராக ஆனந்த் மோகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகம் தளபதியார் அரங்கில் மாவட்ட அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்துகொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை ஒன்றியம் கவிநாடு கிழக்கு பஞ்சாயத்தில் அன்னை நகர் பகுதியில் உள்ள சாலையை நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ரூ 11.42 லட்சத்தில் அமைக்கப்பட்ட புதிய தார் சாலையை அப்துல்லா எம்.பி. ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி அமைப்பாளர் வே. ராஜேஷ் வரவேற்றார். நிகழ்ச்சியில் ஊராட்சிமன்றத் தலைவர் ரங்கம்மாள் பழனிச்சாமி ஓட்டுநர் அணி அமைப்புசாரா தலைவர் வெற்றிச்செல்வன், ஊராட்சி மன்றத் தலைவர் ஒன்றியக் கவுன்சிலர் ஜெயந்தி, வார்டு உறுப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.